Registered at the G. P. O. as a Newspaper ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY    தேசிய தினசரி

போன்: 389    தபாற் பெட்டி எண்: 49

மலர் 3    யாழ்ப்பாணம். பிலவ புரட்டாசி 26 ஆம் நாள்    ஐ. அவ்வல் 1    (12-10 61)    வியாழக்கிழமை    இதழ் 206

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# சிங்களம் கட்டாய பாடம்?

## எல்லாப் பாடசாலைகளிலும் எல்லாரும் படிக்கவேண்டும்

### கல்விக்கமிஷன் சிபார்சு செய்யும்

கொழும்பு, புதன்

எல்லாப் பாடசாலைகளிலும் எல்லா மாணவர்களும் உத்தியோக மொழியான சிங்களத்தைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று தேசிய கல்விக் கமிஷன் சிபார்சு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்களத்தை சகல பாடசாலைகளிலும் கட்டாய பாடமாக்க வேண்டுமென்பதுபற்றி முன்னைய கூட்டங்களில் விவாதித்த கமிஷன் சமீபத்தில் பெரும்பான்மை வாக்குகளால் இவ்விதம் முடிவு செய்ததாகத் தெரியவருகிறது.

கல்விக் கமிஷன் வெள்ளிக்கிழமை கூடும்பொழுது சிங்களத்தைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்ற சிபார்சு அங்கீகரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சிபார்சு உத்தியோக மொழிச் சட்டத்தை உறுதியான முறையில் அமுல் செய்வதற்கு உதவியாக இருக்குமென்று கமிஷன் அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

## சமசமாஜக் கட்சி ஆதரவு நீடிக்குமா?

கொழும்பு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கு லங்கா சமசமாஜக் கட்சி தொடர்ந்து ஆதரவளித்து வருமா? இல்லையா!

இதுபற்றி சமசமாஜக்கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் முடிவு சய்யப்படவிருக்கிறது.

டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் சமசமாஜக் கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலைமை பற்றி ஆராய்ந்து கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் தீர்மானிக்கப்படும்.

## ஆஸ்பத்திரிக்கு செல்லும்வழியில் பிரசவம்

### குழந்தையைப் பெற்றெடுப்பதில் தாய்பட்ட துயரம்

இரத்தினபுரி, புதன்

இரத்தினபுரி பற்றகமவைச் சேர்ந்த ஜீ. பி. மகுநோனு என்பவருக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்ததால் அவரது உறவினர்கள் அவரை இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முயன்றனர். கரப்பிஞ்சா என்னும் இடத்துக்குச் சென்று வாடகைக்கார் ஒன்றை அமர்த்தி மகுநோனுவை இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல நினைத்து அவரது உறவினர் சுமார் அரைமைல் தூரம் மகுநோனுவைக் கூட்டிச்சென்றனர். ஆனல் கரபிஞ்சாவிலேயே மகுநோனுவுக்குப்பெண் குழந்தை ஒன்று பிறந்துவிட்டது. குழந்தையையும் தாயையும் காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர். வேகமாகச்சென்றகார் இன்னுமொரு காருடன் மோதியதால் இரண்டு கார்களும் அதிகம் நொருங்கிப்போயின ஆனல் தாயும் பிள்ளையும் அதிர்ஷ்டவசமாகத் தப்பிக்கொண்டார்கள். வேறு ஒரு காரில் அவர்கள் ஆஸ்பத்திரிபோய்ச் சேர்ந்தார்கள்.

அரசாங்க காலி ஸ்தானங்கள்:

## சேவையில் இருப்பவர்களுக்கே முதலிடம் அளிக்கப்படும்

### நிதிஅமைச்சு சுற்றறிக்கை

கொழும்பு, புதன்

தொழிற்கந்தோரில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொண்டவர்களுக்குத் தான் அரசாங்க இலாகாக்களில் காலியாகும் வேலைஸ்தானங்கள் வழங்கப்படும் என்பதற்கில்லை.

காலியாகும் ஸ்தானங்களுக்குத் தொடர்பான இலாகாச் சேவையாளர்களுக்கும், அதற்குக் கீழ்ப்பட்ட சேவைப் பிரிவைச் சேர்ந்த சேவையாளர்களுக்குமே காலியான பதவிகள் அளிப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும் என நிதிஅமைச்சு ஒரு சுற்றறிக்கையை விடுத்துள்ளது.

நிதி அமைச்சின் அறிவித்தலின்படி ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தான் காலியாகும் ஸ்தானங்களில் அமர்த்தப்படுவர். அரசாங்க இலாகாக்களில் காலியாகும் உத்தியோக ஸ்தானங்களில் அமர்த்துவதற்குக் கீழ்க்கண்டவர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்.

காலியாகும் ஸ்தானத்துக்கு முன்பு அரசாங்க சேவையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட எவரேனும் ஏற்றவராக இருந்தால் அத்தகையவர் அமர்த்தப்படுவர். வேறு அரசாங்க இலாக்காக்களில் தேவைக்கு அதிகமான நிரந்தர சேவையாளர்கள் இருந்தால் அவர்கள் அமர்த்தப்படுவர். குறிக்கப்பட்ட இலாகாவிலுள்ள சிறு உத்தியோகங்களில் அமர்ந்துள்ள எவரும் திறமையுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் காலியாகும் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் சிவில் உத்தியோகஸ்தர்களாக இருந்து வேலையிலிருந்து நீங்கியவர்களும் காலியாகும் ஸ்தானங்களுக்கு நியமிக்கப்படுவர்.

மேலே குறிப்பிடப்பட்டவர்கள் இல்லாதவிடத்துத்தான் வேலைதேடி கொடுக்கும் நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்துகொண்டவர்கள் காலியாகும் ஸ்தானத்தில் அமர்த்தப்படுவர்.

## சூது விளையாடியவருக்கு 6 மாத கடுங்காவல் தண்டனை

கம்பஹா, புதன்

கம்பஹா பஸ் நிலையத்தில் 'பொம்மை' என்னும் சூதுவிளையாடிக்கொண்டிருந்ததாக அக்கிரியாவைச் சேர்ந்த எஸ். சிறிசேன மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கம்பஹா நீதிபதி திரு. எஸ். எஸ். குலத்திலக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி தாம் குற்றவாளியென ஒப்புக்கொண்டார். நீதிபதி அவருக்கு ஆறுமாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

## "பாகிஸ்தானின் செயல் ஆத்திரமூட்டக்கூடியது"

### குறிப்பு விவகாரம்; இந்திய அதிகாரியின் ஆட்சேபம்

புதுடில்லி, அக். 11

"உத்தர பிரதேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட இந்து முஸ்லிம் கலவரம் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துக்கு பாகிஸ்தான் அனுப்பிய குறிப்பு இந்திய அரசாங்கத்திடம் கிடைப்பதற்கு முன்னரே அந்தக் குறிப்பின் விபரங்கள் பாகிஸ்தான் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது ராஜீய மரபுக்கு முரணானது, சிநேகபான்மையற்றது, ஆத்திரமூட்டக் கூடியது" என்று இந்திய பாதுகாப்பு வெளி விவகார இலாகா அதிகாரி பாகிஸ்தானின் குறிப்பைக் கொண்டு வந்து கொடுத்த பாகிஸ்தான் ஹைகமிஷனரிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

உண்மை விபரங்களை அறிந்துகொள்ளாமல் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் முதல் சில்லறை அதிகாரிவரை கண்டபடி கூறுவதும் பாகிஸ்தான் பத்திரிகைகள் வெறிபிடித்த மாதிரி எழுதுவதும் நல்லதல்ல என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

தாம் திங்கட் கிழமைதான் பதவியேற்றதால் உரிய நேரத்தில் குறிப்பைக் கொண்டுவந்து கொடுக்க முடியாமல் தாமதம் ஏற்பட்டுவிட்டதென்றும் இதனல் தான் பத்திரிகைகளில் குறிப்பின் விபரம் முன்னதாகவே வெளியானதென்றும் பாகிஸ்தான் தூதர் விளக்கம் கூறினராம்.

## செனட்டர் இலங்கை திரும்புகிறர்

கொழும்பு, புதன்

ரஷ்யா சென்ற செனட்டர் சரத்விஜயசிங்கா அக்டோபர் 17-ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று இலங்கை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றர்.

## இந்தியர் பிரச்சினை - இவ்வருட இறுதியில் பேச்சுவார்த்தை

### சென்னையில் திரு. பீலிக்ஸ் தகவல்

சென்னை, அக். 10

"இலங்கை – இந்தியர் பிரச்சினைபற்றி இவ்வருடக் கடைசியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது." என்று நிதிமந்திரியும் பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சருமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா இன்று இலங்கை செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அக்ராவில் நடைபெற்ற நிதி மந்திரிகளின் மகாநாட்டிலும் பெல்கிரேட் நடுநிலைமை நாடுகள் மகாநாட்டிலும் ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் இலங்கையின் தலைமைப் பிரதிநிதியாகவும் கலந்துகொண்டபின் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இலங்கை திரும்புகிறர்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்சினைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை-இந்திய பிரதமர்கள் எப்பொழுது சந்திப்பார்கள் என்று நிருபர்கள் கேட்டபொழுது திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பின் வருமாறு கூறினர்:–

இந்திய அரசாங்கத்துடன் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. அது முற்றிலும் உண்மை. இந்தியாவுடன் எந்தப் பிரச்சினையும் இருக்கக் கூடாதென்றே நாங்கள் விரும்புகிறோம். ஆனல் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இலங்கைத் தோட்டப் பகுதி மக்களின் பிரச்சினை இருந்து வருகிறது. திரு. நேருவுடனும் இந்திய அரசாங்கத்துடனும் நாங்கள் பேச்சு வார்த்தை நடத்துவோமென நம்புகிறோம். இவ்வருட கடைசி அல்லது அடுத்த வருட ஆரம்பம்தான் பேச்சு வார்த்தைக்கு உகந்த நேரமெனக் கருதுகிறோம்.

## நவராத்திரி தினம்

காரைநகர், புதன்

வியாவில் சைவ பரிபாலன வித்தியாசாலையில் நவராத்திரி விழா நேற்று ஆரம்பமானது. 18-ந் திகதிவரை காலையில் தினந்தோறும் தேவி தோத்திரப் பாடல்களும், பின்னர் மாணவர்களுக்கு சமய அறிவூட்டக்கூடிய பல பெரியார்களின் சொற்பொழிவுகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### மணி வாக்கு

'சச்சரவு சண்டைகளை நீக்கி சாந்தியை விளைப்பவர்களே பாக்கியவான்கள்'

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம பிலவ ஆண்டு
புரட்டாசி மீ 26 உ (12-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## பஸ் போக்குவரத்து

இலங்கை போக்குவரத்து சபை நடத்தும் பஸ் சேவையைப் பற்றி நமக்குப் பல பல புகார்கள் கிடைக்கின்றன. இப் பகுதியிலே ஓடும் வண்டிகளெல்லாம் லொடலொட்டை, பழைய பாடாவதிகள். அந்த லொடலொட்டைகளும் போதிய அளவு கிடையாது. மணிக் கணக்கில் ஸ்டாண்டுகளிலே பஸ்ஸுகளுக்காகக் காத்துக் கிடக்க வேண்டியிருப்பதாயும் கியூவரிசைகள் இல்லாததால், மற்றவர்களைத் தள்ளிக் கொண்டு பெண்கள் பஸ்ஸிலே ஏறுவது மிகவும் சங்கடமென்றும் பஸ்ஸில் ஏறினலும், சமீப இடத்துக்குச் செல்லுபவர்களை கண்டக்டர்கள் 'இறங்கு கீழே' என்று உத்தரவிடுவதாயும் ஒரு அன்பர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகின்ருர்.

பஸ் போக்குவரத்தை அரசாங்க உரிமையாக்கியதும், பொது மககளின் குறைகளெல்லாம் தீர்ந்து, பஸ் சேவைகள் மேம்படுமென்று நம்பிக்கையுடன் எதிர் பார்க்கப்பட்டது. ஆனல் இதற்கு நேர்மாருக, பஸ் சேவை இப்போது மிக மோசமாகி, பொது மக்களுக்கு அதிக சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளது. பஸ் போக்குவரத்துக்கு நேர அட்டவணை இல்லை என்றும், எந்த நேரத்துக்கு பஸ் வரும், எப்போது புறப்படும் என்றும் மக்களுக்குத் தெரியாதிருப்பதாயும், கூறப்படுகிறது. மேலும் நிர்வாகத்தில் பல ஊழல்கள் இருப்பதாயும் புகார்கள் எழவே, அரசாங்கம் ஒரு கமிஷனை நியமித்து, விசாரணை செய்து வருகின்றது. இக் கமிஷன் அடுத்த வாரம் 15, 16-ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் விசாரணை செய்வதாயும், ஏற்கெனவே மகஜர் அனுப்பியவர்கள் நேரில் அழைக்கப்படுரென்றும் தெரிகிறது. இது சம்பந்தமான குறைகளை எல்லாம் விவரமாக எடுத்துச் சொல்ல இது நல்ல சந்தர்ப்பமாகும்.

இதற்கிடையே மோட்டார் 'வான்'களை அரசாங்கம் எடுக்காதென்றும், குறிப்பிட்ட பாதைகளில் 'வான்'கள் ஓடுவது அனுமதிக்கப்படுமென்றும் தற்காலிக தேசியமய சேவை அமைச்சர் தெரிவித்திருக்கிருர். போதிய பஸ்ஸுகள் ஓடாத நிலையில், 'வான்'கள், பிரயாண பிரச்சினையை ஓரளவு குறைக்கின்றன. ஆகவே இந்த 'வான்'களை அரசாங்கம் நிறுத்திவிடாமல் அனுமதித்திருப்பது நல்லதே. என்ருலும் போக்கு வரத்து பொறுப்பை ஏகபோகமாக ஏற்றுள்ள, இ. போ. ச அதிக பஸ்ஸுகளை எல்லாப்பாதைகளிலும் விடவும், மக்களின் குறைகளைக் கூடுமானவரை நீக்கவும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இ. போ. ச.வில் அரசியல் குறுக்கீடுகள் இருப்பதாக மட்டக்களப்பில் கமிஷன் முன்பாக ஓரன்பர் புகார் கூறியிருக்கின்ருர். இவ்வித புகார்களுக்கு இடமில்லாமல், ஒரு வர்த்தக ஸ்தாபனம் போல பொது மக்களின் நன்மைக்கான முறையிலே இந்தசேவையை நடத்த எல்லா முயற்சிகளையும் செய்ய தேண்டியது அவசியமாகும். பஸ்சேவை நிர்வாகத்தை பிரதேசவாரியாகப் பிரித்து நடத்துவதால், நஷ்டங்கள் குறைந்து லாபமும் கிடைத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இப்பிரதேச சபைகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்து, மக்களின் குறைகளை நேரில் கேட்டு அவற்றை அவ்வப்போது கூடுமானவரை தீர்க்க வகை செய்ய வேண்டும். கமிஷன் அறிக்கை வெளியாகும்வரை காத்திராமல், இடையிலேயே கூடுமான சீர் திருத்தங்களைச் செய்யலாம். பொதுமக்களுக்கு மேலான பஸ் சேவை கிடைக்கும்படி எப்படியும் செய்ய வேண்டியது அரசாங்கத்துடைய கடமை. இக்கடமையை அது செய்ய முடியாவிடின், பொது மககளின் அதிருப்திக்கும், மனக்கசப்புக்கும் அரசாங்கம் தன்னை பாத்திரமாக்கிக்கொண்டதாகும்.

# சிகரெட் புகையிலை கம்பெனி தேசியமயம்

## நிதானமாக ஆலோசிக்கப்படவேண்டும்

### தனிப்பட்டோரும் உற்பத்திசெய்ய வசதிசெய்தல் அவசியம்

### இலங்கைப் புகையிலை அதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், புதன்

"இலங்கையின் இதரபாகங்களில் செய்யப்படும் வேறு பயிர்வகைகளிலும் பார்க்க சிகரெட் புகையிலையே கூடுதலான வருமானம் பெறுகின்றது. இதர பகுதிகளில் தனிப்பட்டவர்களும் சிகரெட் புகையிலை உற்பத்தி செய்வது போல யாழ்ப்பாணத்திலும் தனிப்பட்டோரும் செய்து உலர்த்தி அரசாங்கத்துக்கு கொடுக்க வழி செய்யப்படல் வேண்டும். சிகரெட்புகையிலைக் கொம்பனியை தேசியமயமாக்க வேண்டுமா என்பது நிதானமாக ஆலோசனை செய்த பின்பே முடிவு செய்யப்பட வேண்டும்".

இவ்வாறு யாழ்ப்பாணம் பாரதி பாஷிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சமாஜத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசும் போது இலங்கை புகையிலை அதிகாரி திரு. இ. ஜெயநிதி கூறினர். கூட்டத்துக்கு திரு. வி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

திரு. ஜெயநிதி தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் 1 ஏக்கருக்கு 1000 ருத்தல் வரை சிகரெட் புகையிலை விளைகிறது. கமக்காரரின் கவனக் குறைவான செய்கைகளால் தரக் குறைவுண்டாகிறது. விலையைக் கூட்ட வேண்டுமென்று வாதாடுவதிலும் பார்க்க தரத்தைக் கூட்டினல் 1 ஏக்கருக்கு 2500 ரூபா வரை யாழ் கமக்காரர் ஆதாயம் பெற இடமுண்டு. நிர்வாகக் குறைவான சங்கங்கள் கெதியில் திருத்தி ஆவன செய்யாவிட்டால் மூடப்படும். யாழ் உற்பத்தி குறைத்ததாலேயே இரு சிகரெட் புகையிலை விவசாயப் போதனாசிரியர்கள் மாற்றப்பட்டனர். தற்போது திருப்பம் ஏற்பட்டுள்ளமையால் ஒருவரை நியமித்துத் தருவேன் பரீட்சார்த்தமாக இன்னும் ஒருவருடம் நடைபெற்ற பின்னர் மாவட்ட அதிபர் சிபார்சு செய்தால் இ. வி. கழகங்கள் பதிவு செய்யப்படும் நிர்வாகக் குறைவான சங்கங்களின் போறணைகளை ஏற்று சிகரெட் புகையிலையைப் பச்சையாக வாங்கி உலர்த்தி விற்பனவு செய்யும் விஷயமாய் உங்கள் மலையாளப் புகையிலைச் சங்கம் யோசித்துச் செய்யலாம்.

#### சங்கங்களின் நிலை

சமாசக் காரியதரிசி திரு. க. இ. குமாரசாமி அவைரையும் வரவேற்றுப் பேசும் போது குறிப்பிட்டதாவது:-

"யாழ்ப்பாணத்தில் 800 ஏக்கர் செய்யத் திட்டமிட்டும் சென்ற வருடம் 350 ஏக்கரிலேயே சிகரெட் புகையிலை செய்யப்பட்டுள்ளது. மலையாளப் புகையிலையின் ஏற்றுமதியில்லாமற் போனல் கமக்காரர் மிகவும் கஷ்டமடைவர். சிகரெட் புகையிலையையும் ரளவாவது உற்பத்தி செய்வது நல்லது. இவ்வருடம் சிகரெட் புகையிலைசெய்த கமக்காரர் நல்ல லாபம் அடைந்துள்ளனர். பரீட்சார்த்தமாகத் தொடக்கப் பெற்ற பீடிப் புகையிலையும் அடுத்த வருடங்களில் கூடுதலாகச் செய்யப்படவிருக்கிறது.

இப் போதைய சிகரெட் புகையிலை விலை 1950-ல் நிர்ணயிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று உற்பத்திச் செலவுகளும், உலர்த்தற் செலவுகளும மிகவும் கூடிவிட்டன. விலையை 25 சத வீதமாவது உயர்த்தும்படி கேட்டோம். இருத்லுக்கு 25 சதம் தான் உயர்ததப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் உள்ளவர்களும் விலையைக் கூட்டும்படி இப்போது கிளர்ச்சி செய்கின்றனர். 1 ருத்தல் புகையிலைக்கு அரசாங்கம் 28 ரூபாய் தீர்வை பெறுகிறது. தீர்வையைக் குறைத்தாயினும் சிகரெட் புகையிலை விலையைக் கூட்டவேண்டியது நியாயமானதே. 1960-ல் சிகரெட் புகையிலைக் கொம்பனிக்கு 70 லட்சம் ரூபாய்லாபம் கிடைத்துள்ளது என அறிகிரேம். ஆனலும் கமக்காரர்களுக்கு 1950 விலையே கிடைபபது நியாயமில்லை. சங்கங்களுக்கு கடன் கிடைப்பதில் தாமதம் உண்டு. சங்குவேலி, வட்டுச் கோட்டை இளைஞர் விவசாயக் கழகங்கள் நல்ல முறையில் நடைபெறுவதால் அவற்றைக் சிகரெட் புகையிலைச் சங்கமாகப் பதிந்து அரசாங்கச் கடன் கொடுக்க வேண்டும். நிர்வாகக் குறைவுள்ள சங்கங்களை அரசாங்க உத்தியோகஸ்தர் உதவியோடு நடத்துதல் நல்லது சங்கங்களை இன்றைய நிலையில் குலைத்தல் வரும்பத்தக்கதல்ல.

சிகரெட் புகையிலை உற்பத்தியை யாழ்ப்பாணத்தில் கூட்டுவது சம்பந்தமாக நடந்த விவாதத்தில் புகையிலை அதிகாரி, யாழ்.மாவட்ட விவசாய அதிபர் எஸ். துரைசிங்கம், விவசாய உதவி அதிபர் எஸ். பாலசிங்கம், யாழ் கிழக்கு கூட்டுறவுஉதவியாளையாளர் எஸ் ஆர். ஆசீர்வாதம், புகையிலை விவசாயப் போதனசிரியர்கள், கூட்டுறவு மேற்பார்வை உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

தீர்வையைக் குறைத்தாயினும் சிகரெட் புகையிலை விலையைக் கூட்டவேண்டும். யாழ். மலையாளப் புகையிலைச் சங்கம் தனது பெயரை மாற்றி யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் சிகரெட் புகையிலை பச்சையாக வாங்கி உலர்த்தி உடனுக்குடன் பணம் கொடுக்கத்தக்கதான ஒழுங்கையும் செய்யுமாறு கேட்டல் சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு. இ. வேலாயுதர் நன்றி கூறினர்.

# "ஆங்கிலத்தை ஒதுக்கித் தள்ளக்கூடாது"

## வித்தியாதிபதி புத்திமதி

மக்கோனை, செவவாய்

"சுயபாஷையில்தான் மக்களுக்குக் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. ஆனல் எக்காரணத்தைக் கொண்டும் எங்கள் பாடசாலைகளில் ஆங்கிலம் புறக்கணிக்கப்படக் கூடாது" என்று வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி. சில்வா அளுத்கம வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் முக்கியததுவத்தைப் பற்றி வலியுறுத்திக் கூறிய திரு சில்வா தேசியம் என்ற போலி வேஷத்தில் ஆங்கிலத்தை ஒதுக்குபவர்களைக் கண்டித்தார்.

வித்தியாதிபதி சில்வா மேலும் கூறியதாவது:-

ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் விஞ்ஞானம், இலக்கியம், சரித்திரம் ஆகிய வைகளைச் சுயபாஷையில் கற்பிக்கவும் விளக்கிக் கூறவும் முடியும்.

சாதனை பயிற்சிக் கல்விபற்றி திரு சில்வா குறிப்பிடுகையில் மட்பாண்டத் தொழில் பயிற்சி, தச்சுத் தொழில் பயிற்சி ஆகியவைகளில் தங்கள் பிள்ளைகள் பயிற்சி பெறுவதைப் பெற்ருேர் ஒருபோதும் குறைவாக மதிக்கக் கூடாது என்ருர். இவை போன்ற சாதனை பயிற்சிப் பாடங்கள் பிள்ளைகளின் திறமையை வளர்ச்சியடையச் செய்யுமென்று அவர் கூறினர்.

"எதிர் காலக் கல்வி உண்மையில் எப்படி இருக்கப்போகிறது! இப்பொழுதே அதைப் பற்றிக் கூறுவது சாத்தியமில்லை. இதற்காக விசாரணை செய்துவரும் கல்விக் கமிஷனின் சிபார்சுகளைப் பொறுத்த விஷயம் அது. என்ருலும சர்வகலாசாலையில் சேர்ந்து உயர் தரக் கல்வி பெறுவதற்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் சந்தர்ப்பமளிக்கப்படும்" என்று திரு. சில்வா தெரிவித்தார்.

## அழகப்ப கல்லூரி விழாவில்

### பண்டிதர் இரத்தினம் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன்

இம்மாத இறுதியில் காரைக்குடி அழகப்பா கல்லூரியின் பேரவை நடாத்தும் கலைவிழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்ற இலங்கை அரசகரும மொழி ஆராய்ச்சி அதிகாரியான பண்டிதர் கா. பொ. இரத்தினம் அழைக்கப்பட்டுள்ளார். "ஈழநாடடுத தமிழ்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுமாறு பேரவை கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இம்மாதம் 25-ம் திகதி பண்டிதர் காரைக்குடிக்கு புறப்படலாமெனத் தெரிகிறது.

## ஐயாறன் எழுதுவது

நடப்பது நவராத்திரி காலம். பல கோவில்கள், பள்ளிக்கூடங்கள், வீடுகள் இவற்றிலெல்லாம் நவராத்திரி வழிபாடுகள் அழகாக நடப்பதைப் பார்க்கிறேம்.

தமிழகத்திலே, வீட்டுக்கு வீடு, கோவிலுக்குக் கோவில் கொலு வைத்திருப்பார்கள். அழகான பலவித பொம்மைகளை, பல படிகளில் வரிசை வரிசையாக வைத்து, ஒவ்வொரு வீடும் ஒரு சிறிய அழகிய கண்காட்சிசாலைபோல இருக்கும். யார் வீட்டுகொலு மிக நன்ருக இருக்கிறதென்று போட்டிகளுமுண்டு.

* * *

பெண் குழந்தைகள் உள்ள வீடுகளில்தான் நவராத்திரி என்ருல் புது அழகும் உற்சாகமும். தலைவாரி, விதம்விதமாகப் பின்னி, பூச்சூடி, நல்ல ஆடை ஆபரணங்கள் பூண்டு ஒவ்வொரு பெண் குழந்தையும் நடமாடும் அழகுத் தெய்வம் போல், மாலை நேரத்தில் வீடுவீடாக அழைக்கச் சென்று அங்கே இரண்டொரு பாட்டுகள் பாடி சுண்டல் தாம்பூலம் இவற்றைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடனே கூட்டம் கூட்டமாக சிரித்து பேசிக்கொண்டு செல்லுவது. ஊருக்கே தனி அழகளிக்கும்.

உண்மையில் இது ஓர் கலை விழா. சிற்பம், இன்னிசை முதலிய பல கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் பெருமை அளிக்கும் உற்சவம் இது.

இங்கு இலங்கையிலே கொலுவைக்கும் வழக்கம் அதிகமில்லை சில வீடுகளில் வைக்கிருர்கள். இந்த வழக்கம் அதிகமாக இங்கு பரவுவது விரும்பத்தக்கதாகும்.

* * *

நேற்று வண்ணை சிவன்கோவிலுக்குச் சென்றிருந்தேன். விசேஷ பந்தல் அலங்காரம் எல்லாம் செய்து, பாலாம்பிகைக்கு சோடசோபசார பூஜைகள் விமரிசையாக நடந்தன. பெண்மைக்குப் பெருமை செய்யும் இவ்விழாவைக்காண உள்ளம் பூரித்தது. அரசியல் முதலிய துன்பங்களெல்லாம் மறந்து புதிய இன்ப உலகத்துக்குக் கொண்டு செல்லுகின்றது இவ்வித சூழ்நிலை.

இதைக் கண்ட ஓர் அன்பர், 'மைசூர் தசராவைப் பார்க்க வேண்டும்' அடாடா! கண்கொள்ளாக்காட்சி. பல வருடங்களாகியும் இன்னும் என் கண்கள் அவற்றை மறக்கவில்லை" என்ருர்.

விஸா, செலாவணிக் கெடுபிடிகளால் நாம் அங்கு செல்லுவதென்பது சுலபமல்ல. ஆகவே இந்திய அரசாங்கம் அவற்றையெல்லாம் கலர் சினிமாப்படம் பிடித்து இங்கு கொண்டு வந்து காட்டினல் பெரிய உபகாரமாக இருக்கும்.

* * *

தேர்தல் என்ருல் அது ஒரு 'நியூஸன்ஸ்' தொல்லை என்ருர் சென்னை கூட்டத்தில் நேருஜி.

அலிகார் சர்வகலாசாலையில் ஏற்பட்டுள்ள வருப்புக்கலகத்துக்கும், அங்கு நடந்த மாணவர் யூனியன் தேர்தல்தான் காரணமாம்! மாணவர் யூனியன் தேர்தலே இவ்வளவு பயங்கரமாக இருக்கையில் அடுத்துவரும் பொதுத்தேர்தலைபற்றி நினைக்கவும் தமக்கு பயமாக இருப்பதாக உபஜனதிபதி ராதா கிருஷ்ணன் வாய்விட்டுக் கூறினர்.

இலங்கையிலே போட்டி அரசியல் வாதிகளுக்கு எடபோதும் அடுத்த தேர்தல் பற்றிய கவலை. இன, மொழி, சாதி,மத வெறிகளில் எதைக் கிளப்பிவிட்டால் அதிக வாக்குகள் கிடைக்குமென்பது அவர்கள் யோசனை.

தேர்தல் காலத்தில் கள்ளத்தோணிகள் கோடிக்கணக்கில் பெருகுவதும் இந்தியத் துவேஷம் உச்சநிலை அடைவதும் சகஜம். இதையெல்லாம் பார்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. நூலகத்துக்கு ஹமர்ஷீல்டின் பெயர்

## இலங்கை ஆதரவு

ஐ. நா. [illegible]க், அக். 10
[illegible] சபையின் பு[illegible]ததை காலஞ்சென்ற [illegible]பொதுக்காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் பெயரால் அழைக்கும்படி "போட்" அறநிதி ஸ்தாபனம் விடுத்த வேண்டுகோளை இலங்கை உட்பட ஒன்பது நாடுகள் ஆதரித்துள்ளன.

ஐ. நா. பொதுச்சபையில் நிர்வாகக் குழுவின் முன் கொண்டுவந்த பிரேரணையில் இதனை நவம்பர் மாதம் 16-ம் திகதி "டாக் ஹமர்ஷீல்ட் நூலகம்" என பெயர் சூட்ட வேண்டுமென வேண்டியுள்ளது.

இப் பிரேரணையை கடந்த வாரம் "போட்" அறநிதிஸ்தாபனத்தின் தலைவர் ஹென்றி ரி. ஹீல்ட் தெரிவித்திருந்தார். காலஞ்சென்ற பொதுக்காரியதரிசி இந்நூலகத்தில் கொண்டிருந்த சிரத்தையின் காரணமாகவே "போட்" ஸ்தாபனம் 62,000,00 டாலர் உதவிவழங்க தீர்மானித்துள்ளதென அவர் கூறினர்.

# மாக்மிலன் - குரோமிக்கோ 'பயனுள்ள பேச்சுவார்த்தை'

லண்டன், அக். 11
நியுயோர்க்கிலிருந்து மாஸ்கோவுக்குச் செல்லும் வழியில் லண்டன் வந்து சேர்ந்த ரஷ்ய வெளி விவகார மந்திரி திரு. குரோமிக்கோ பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலனைச் சந்தித்துச் சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினர். பெர்லின், ஜெர்மனி, ஐ நா. தலைமைக் காரியதரிசி பதவி பற்றி இருவரும் பேச்சு வார்த்தை நடத்தியபோதிலும் இப்பிரச்சினைகளை அணுகுவதற்கு புதிய யோசனை எதுவும் தெரிவிக்கப்படவில்லையென்று தெரிகிறது.

பெர்லின் பிரச்சினை உலக நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தான கட்டத்திலுள்ளதென்பதை இருவரும் ஒப்புக்கொண்டனராம்.

பெர்லின் விவகாரத்தில் அமெரிக்காவின் கொள்கையை பிரிட்டன் பூரணமாக அங்கீகரிக்கிறது என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. குரோமிக்கோவிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

பேச்சு வார்த்தையின் பின் திரு. குரோமிக்கோ பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் திரு. மாக்மிலனும் தாமும் நடத்திய பேச்சு வார்த்தைகள் பயனுள்ளவையாக இருந்ததாகக் கூறினர்.

திரு. குரோமிக்கோ மாஸ்கோ சென்று பிரதமர் குருஷ்சேவிடம். தாம் திரு. கென்னடியுடனும் திரு. மாக்மிலனுடனும் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றிய விபரத்தைத் தெரிவித்தார்.

## "சிரியா புரட்சியின் நோக்கம்"

டமாஸ்கஸ், அக். 11
"எல்லோரின் நலனுக்காகவுமே புரட்சி இயக்கம் ஏற்பட்டது" என்று சிரியாவின் புதிய அரசாங்கப்பிரதமமந்திரி டாக்டர் மமொன் குஸ்பாரி நேற்று தம்மை உற்சாகத்துடன் வரவேற்ற மூவாயிரம் கிராமவாசிகள் முன்னிலையில் பேசுகையில் கூறினர்.

மக்களின் உரிமைகள் மீண்டும் வழங்கப்படும். நான்கு மாதங்களில் பொதுத்தேர்தல் சுதந்திரமாக நடைபெறும். ஆனல் பொதுத்தேர்தலில் புரட்சி இயக்கத்தின் நோக்கத்தைச் சீர்குலைக்கக்கூடிய 'ஆபத்தான கட்சிகள்' அனுமதிக்கப்படமாட்டா" என்று டாக்டர் குஸ்பாரி தெரிவித்தார்.

## பீகாரில் வெள்ளம் வடிகிறது

புதுடில்லி, அக். 11
பீகாரில் வெள்ளம் வடிந்து கொண்டிருக்கிறது. இரண்டு தினங்கள்விடாது பெய்த கடும் மழை காரணமாக பீகார் ராஜ்யத்திலுள்ள எட்டு நதிகளில் ஏற்பட்ட பிரவாகம் அங்கு சுமார் ஆயிரம் மக்களின் உயிரையும் இருபதினயிரம் கால் நடைகளையும் பலி கொண்டது. 1,30,000 வீடுகள் நாசமடைந்தன. 1,700 கிராமங்கள் சேதமடைந்தன. பயிர்கள் முற்ருக நாசமடைந்தன.

வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி அளிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## லாவோஸ் மன்னரை பூமா சந்திப்பார்

லண்டன், அக். 11
லாவோசில் கலப்பு அரசாங்கம் நியமிப்பதற்கு தற்காலிக பிரதம மந்திரியாக நியமிக்கப்படவிருக்கும் லாவோஸ் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா, நாளை வியாழக்கிழமை லுவாங்பிரபாங் சென்று மன்னர் சவன்னவத்தனவைச் சந்திப்பார்.

பிரதமரை மன்னர் முறைப்படி நியமிக்கவேண்டும். இதன் பின்னரே பிரதம மந்திரி தமது மந்திரி சபையை அமைப்பார்.

## அமெரிக்காவின் 3 வது குண்டு

வாஷிங்டன், அக். 11
அமெரிக்கா மற்ருெரு அணு குண்டை நேற்று நிலத்துக்கு அடியில் பரீட்சித்தது. அணு ஆயுத பரீட்சைகளை மீண்டும் அமெரிக்கா சென்ற மாதம் ஆரம்பித்ததிலிருந்து நேற்று மூன்ருவது குண்டு பரீட்சிக்கப்பட்டது. முதலிரண்டு குண்டுகளும் பரீட்சிக்கப்பட்ட நெவாடா என்ற இடத்திலேயே இக்குண்டும் பரீட்சிக்கப்பட்டது.

## கிழக்கு ஜேர்மனியில் படைகள் குவிகின்றன

பொன், அக். 10
கிழக்கு ஜேர்மனியில் வார்சா ஒப்பந்த நாடுகளின் படைகள் வந்து குவிவதாக மேற்கு ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போலந்து, செக்கோஸ்லவோக்கிய ஆகிய நாடுகளின் படைகள் கிழக்கு ஜேர்மனிக்கு முதல் தடவையாக வந்து சேர்ந்துள்ளதாக அந்த அதிகாரி கூறினர்.

அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்டது போன்ற ராக்கட்டுகளும் போலந்திலிருந்து கிழக்கு ஜேர்மனிக்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மரணவீட்டுக்குச் சென்றவர்மரணமானர்!

குருநாகல், புதன்
யந்தன்பலாவைச் சேர்ந்த 65 வயதுடைய என். பி. விஜயதாசா மரணவீட்டுக்குச்செல்லும் வழியில் காரினல் மோதப்பட்டு மரணமானர்.

பதில்நீதிபதி திரு. டி. ஏ. எஸ்.ரணவீரா மரணவிசாரணை செய்தபோது இதுவிஷயம் தெரிவிக்கப்பட்டது.

கார்ச்சாரதி என். பி. குணதாசாவை விளக்கமறியலில் வைக்குமாறு பதில்நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# "நாட்டை ஆள்வது தேநீர் கடை நடத்துவது போலல்ல!"

## டாக்டர் என். எம். பேச்சு

இரத்மலானை, புதன்
"சம்பளக் கமிஷன் அறிக்கையை ஆறுமாதங்களில்அமுல் நடத்துவதாக காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா 1957-ம் வருடத்தில் உறுதிகூறியிருந்தார். நான்கு வருடங்கள் கழிந்த பின்னர், அந்த அறிக்கையை அமுல் நடத்துவதற்கு போதிய பணம் இல்லையென்று நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா கூறுகிருர். இது மிகவும் கேவலமான நிலைமை" என்று லங்கா சமசமாஜக்கட்சித்தலைவர் டாக்டர் என் எம். பெரேரா இரத்மலானை ரயில்வே வேலைத் தலதொழிலாளர் யூனியனின் 24-வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"ஒரு நாட்டை ஆட்சி செய்வது ஒரு தேநீர்க்கடையை நடத்துவது போல் அல்ல! உண்மையான தூரதிருஷ்டியும், சரியான திட்டமும், ஞானமும், அனுபவமும், மக்களின் நம்பிக்கையும் ஒரு அரசாங்கத்துக்கு இருக்கவேண்டும்" என்று டாக்டர் பெரேரா கூறினர்.

தொழிற்சங்க ஸ்தாபனங்களின் இணைப்புக் கமிட்டியின் சார்பில் திரு. பாலாதம்பு பேசுகையில், நிதிமந்திரி, திறைசேரி அதிபர், மத்திய வங்கி கவர்னர் ஆகியோர் கூட இரகசியமாகச் செய்த முடிவுகள் தான் வரவுசெலவுத்திட்டம் என்ருர்.

அரசாங்க பார்லிமெண்டரிக் குழு அங்கத்தவர் களைக்கூட கலந்தாலோசிக்கவில்லையென்று கூறிய திரு. பாலாதம்பு வரவு செலவுத்திட்டத்தைக் கண்டித்துக் கூறுவதற்குக் கூட அவர்கள் அனுமதிக்கப்படவில்லையென்ருர்.

## பிரிட்டிஷ் வர்த்தக கமிஷனர் கொழும்பு திரும்பினர்

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்த பிரிட்டனின் வர்த்தக உதவிக் கமிஷனர் திரு. ஜே. சி. சுலோமன் இங்குள்ள பல்வேறு பிரமுகர்களையும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியதுடன் சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களையும் தொழில் நிலையங்களையும் சென்று பார்வையிட்டார்.

திங்கட்கிழமை இங்கு விஜயம்செய்த திரு. சுலோமன் சுன்னகம் இராமநாதன் கல்லூரி, தீப்பெட்டித் தொழிற்சாலை, மூழாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி, தோலகட்டித் தோட்டம், அச்சுவேலி நெசவு நிலையம், புத்தூர் நிலாவரை, நீர்வேலி வாழைக்குலைச் சங்கம், பாலர் பகல் விடுதி, கோப்பாய் பன்னவேலைப் பயிற்சி நிலயம், யாழ்ப்பாணம் கோட்டை பண்ணை ஆகிய இடங்களுக்கு சென்று பார்வையிட்டதோடு நயினதீவி நாகபூஷணி அம்மன் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில், ஸ்ரீ நாகவிகாரை ஆகிய புனித இடங்களையும் தரிசித்தார்.

யாழ்ப்பாணம் ஏதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மேயர், மற்றும் தொழில் நிலையங்களின் தலைவர்கள் ஆகியோரையும் திரு. சுலோமன் சந்தித்துப் பேசினர்.

நல்லெண்ணத் தூதுவராக இங்கு வந்திருந்த திரு. சுலோமன் புதன்கிழமை கொழும்பு திரும்பினர்.

# இலவசகல்வித்திட்டம் எப்படி வந்தது?

## கல்வி மந்திரி விளக்கம்

பதுளை, செவ்வாய்
"காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவைத் தலைவராகக் கொண்ட சிங்கள மகா சபையின் உப தலைவராகவிருந்த சமயத்தில் திரு. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்" என்று கல்வி அமைச்சர் ஜனப் பதியுதீன் மாமூத் பதுளை மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான கூட்டத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த வைபவத்துக்கு முன் பாடசாலைப் பிள்ளைகளின் அணிவகுப்பும் உடற் பயிற்சிக் காட்சியும் நடைபெற்றது.

கல்வி அமைச்சர் ஜனப் பதியுதீன் மாமூத் மேலும் கூறியதாவது:-

சிங்கள மகாசபையிலிருந்த பொழுது, காலஞ் சென்ற பிரதமரின் சோஷலிஸ கொள்கைகளைப் பின்பற்றிய திரு. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா முதலாளித்துவ வகுப்பினரின் பலத்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் நாட்டுக்கு இலவசக் கல்வித் திட்டத்தைக் கொடுத்தார். கிராம மக்களுக்குச் சமசந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்ற தமது கொள்கைக்கிணங்க காலஞ் சென்ற பிரதமர் சிங்களத்தை உத்தியோகமொழியாக்கினர். இதன் மூலம் ஒரு கிராமப் பிள்ளை சிங்களத்தில் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டு.

காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கை வழியை திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் தலைமையில் கடைப்பிடித்துவரும் இன்றைய அரசாங்கம் ஒருமைப்பாடுடைய தேசிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

# திபேத்துக்கு அரசியல் நகல்திட்டம் தயாராகிறது

## தஞ்சம் புகுந்த தலாய்லாமா முயற்சி

புதுடில்லி, அக். 10
இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள தலாய்லாமா 'சுதந்திர ஜனநாயக திபேத்'துக்கான அரசியல் நகல்திட்டமொன்றை தயாரித்துள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

விசேஷமாக நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டியினல் தயாரிக்கப்பட்ட அரசியல் நகல் திட்டத்தை அங்கீகரிப்பதற்காக இந்தியாவில் தற்பொழுதுள்ள திபேத்தியர்களைக்கொண்ட ஒரு கூட்டத்தை தலாய்லாமா விரைவில் கூட்டுவாரென்று தலாய்லாமாவின் விசேஷ பிரதிநிதி கூறினர்.

பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயக அரசாங்கத்துக்கான அரசியல் திட்ட நகல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள திபேத்தியர்கள் இந்தியாவிலிருந்தே 'திபேத் அரசாங்கம் அமைப்பதை' இந்திய அரசாங்கம் விரும்பாததுடன் இந்த முயற்சிக்கு ஊக்கமளிக்க மறுத்து வந்தபோதிலும் தலாய்லாமாவின் 'அரசியல் திட்டம் தயாரிக்கும், முயற்சி இந்தியாவிலேயே 'திபேத் அரசாங்கத்தை' அமைக்கும் முயற்சியில் முதல் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

## படகு விபத்தில் நால்வர் மரணம்

ஸ்ரீநகர், அக். 11
காஷ்மீரில் மீன் பிடிப் படகு ஒன்று புயலில் சிக்கி கவிழ்ந்ததில் நான்கு மீன்பிடியாளர்கள் மாண்டனர். மாண்டவர்களின் சடலங்கள் இன்னும் கண்டெடுக்கப்படவில்லை.

## துருப்புக்களை அனுப்ப முடிவில்லை

வாஷிங்டன், அக். 11
தென் வியட்நாம் அரசாங்கத்துக்கு துருப்புக்களை அனுப்ப முடிவு செய்யப்படவுமில்லை. துருப்புக்கள் அனுப்பும்படி தென் வியட்நாம் அரசாங்கம் கேட்கவுமில்லை என்று அமெரிக்க ராஜாங்க காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பிறந்த குழந்தையின் சடலம்

கித்துல்கல, செவ்வாய்
எட்டியாந்தோட்டை பொலிஸ் பகுதியில் கனபல்ல தோட்டத்தில் 'லயன்' வீடுகளின் பின்புறம் ஒரு குழந்தையின் சடலம் நிலத்துள்ளிலிருந்து எடுக்கப்பட்டது.

இக்குழந்தை கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டிருப்பதாக மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. குழந்தையின் கழுத்தில் சிறு கயிற்றுத்துண்டும் காணப்பட்டது.

கலியாண மாகாத மூக்காயி என்ற பெண்தான் இக்குழந்தையின் தாயாரெனச் சொல்லப்படுகிறது. மூக்காயி கித்துல்கல ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## "மன நம்பிக்கை இருக்கவேண்டும்"

அங்கரைப்பற்று, செவ்வாய்
"முதலில் எங்களிடத்தில் இருக்கும் அவநம்பிக்கை நீங்கி மன நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்க வேண்டும்" என்று அட்டாளைச்சேனை இஸ்லாமிய கலாச்சார நிலயத்தில் நடைபெற்ற தமிலிக் ஜமாஅத் கூட்டத்தில் பேசுகையில் மௌலவிபாறுக் குறிப்பிட்டார்.

# "உலகம் முழுவதிலும் வாழ்க்கை செலவு உயர்ந்துள்ளது"

## உணவு அமைச்சர் சமாதானம்

கம்பளை, புதன்

"வாழ்க்கைச் செலவு உயர்வு இந்த நாட்டிற்கு மட்டும்தான் உள்ள தொன்றல்ல. ஜனத் தொகைப் பெருக்கம் காரணமாக உலகிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. சாத்தியமானவரை வாழ்க்கைச் செலவைக் குறைப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்று உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின நியாங்கந்தோரா என்ற இடத்தில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளையொன்றைத் திறந்து வைத்துப்பேசுகையில் கூறினர்.

"எளியமக்களை அரசாங்கம் கஷ்டப்படுத்துவதாக யு. என். பி. யினர் இப்பொழுது அரசாங்கத்தைக் குறை கூறுகின்றனர்கள். பிள்ளைகளின் நண்பகல் உணவான பணிஸை' இல்லாமல் செய்தது யார்? ஏழை மக்களுக்குக் கிடைத்து வந்த தர்மப்பணத்தை இல்லாமல் செய்தது யார்? என்று அவர்களைக் கேட்கவிரும்புகிறேன்.

பெரும்பான்மையான மக்களின் ஆதரவுடன் ஆட்சிபீடத்துக்கு வந்த ஒரு அரசாங்கத்தை, மக்களின் நலனுக்காகச் செய்யப்படும் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டியதுதான் எதிர்க்கட்சியின் கடமையேயொழிய அவைகளுக்கு இடையூறுசெய்வதல்ல என்று திரு. இலங்கரத்தின மேலும் கூறினர்.

கொத்மலை எம். பி. திரு. ஜே. டி. வீரசேகரா பேசுகையில் அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கையை அமுல் நடத்துவதால் ஒரு சில பிரிவினர் கஷ்டப்படவேண்டிநேரிடுமென்றாலும் நாட்டின் நலனை உத்தேசித்து தியாகம் செய்யத்தான் வேண்டுமென்றார்.

---

## அரசாங்கம் ஏழைகளுக்கு நன்மையளிக்கும்

கொழும்பு. புதன்

"இப்போதுள்ள அரசாங்கம் விரைவில் கலைக்கப்படலாம் என சில பகுதியினர் கூறிவருகிறார்கள். ஆனல் இதுபற்றி கருத்துத் தெரிவிப்பது மூடத்தனமாக இருக்கும் என உதவி நிதிமந்திரி திரு.ஜோர்ஜ் இராஜபக்ச மொறவாக்க மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற் பேசும்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது.-

'இப்பொழுதுள்ள அரசாங்கம் காலம்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளையே பின்பற்றி வருகிறது. ஆனல் இவ்வித முன்னேற்றக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாது எதிர்க்கும் பிற்போக்குவாதிகள் பொய்ப் பிரசாரத்தைப் பரப்புகிறார்கள். ஆனல் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது அரசாங்கம் ஏழைகளுக்கு நன்மையளிக்கும் சகலமசோதாக்களையும் அமுல் நடத்தும்.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்றீஸ்லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D. 3.

## இலங்கையில் 22,867 குற்றவாளிகள்

அனுராதபுரம், செவ்வாய்

பலதடவை குற்றம்புரிந்து சிறைசென்ற 22,867 பதிவுசெய்யப்பட்ட குற்றவாளிகள் இலங்கையில் உளர். இவர்களில் 16,818 பேர் சிங்களவராவர்' ஒருதடவை குற்றம்செய்து தண்டனைக்குள்ளானவர் தொகை 150,225 ஆகும்.

5 வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்ட 265 பாலியக் குற்றவாளிகள் இருதட்வைகளோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தடவைகளோ குற்றம் செய்து தண்டனைக்குள்ளாசியவர். இதே வயதுக்குள் அடங்கிய 765 சிறுவயதுக் குற்றவாளிகள் ஒருதடவை குற்றம் செய்து தண்டனைக்குட்பட்டவர். 1,429 பாலிய குற்றவாளிகள் ஒருதடவை தண்டனைக் குள்ளாகியுள்ளவர்கள். இவர்களில் 558 பேர் இரண்டு தடவைகளுக்கு அதிகமாகத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள்.

அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் டி. பி. கரவித்தா சர்வதேசக் குழந்தைகள் தினத்தையொட்டி அரசாங்க மத்திய கல்லூரியில் நடைபெற்ற விழாவின்போது இப் புள்ளி விவரங்களைத் தெரிவித்தார். திரு. கரவத்தா மேலும் தெரிவித்ததாவது:

"பிள்ளைகளை அவர்களின் பெற்றோர் கவனியாதிருப்பதே குற்றங்கள் பெருகிவருவதற்கு அடிப்படைக் காரணம் என்று நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆராய்ச்சியால் அறியக்கிடக்கின்றது. சிறு பிராயத்திலே பிள்ளைகள் கவனிக்கப்படாதுவிட்டால் அவர்களிடையே ஒரு பாதுகாப்பற்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இதன்விளைவாகவே அவர்கள் குற்றவாளிகளாக மாறுகிறார்கள் பெற்றோர்களுக்குத் தம்மீது எதுவித அக்கறையுமில்லை என்று உணர்ந்துவிடும் பிள்ளைகள் இயற்கையாகவே குற்றவாளியாக மாற விரும்புவார்கள்.

பெற்றோர் தமது பிள்ளைகளில் கவனம் செலுத்தாவிட்டால் எதிர்கால சமுதாயமும் நாட்டின் எதிர்காலமும் அதிகம் பாதிக்கப்படும். எனவே தமது குழந்தைகள் மீது கவனம் செலுத்துமாறு திரு. டி. பி.கரவித்தா பெற்றோரைக் கேட்டுக்கொண்டார்.

---

## பொருளாதார முன்னேற்றம் பற்றி

### டாக்டர் என். எம். பெரேரா

மொறட்டுவை, செவ்வாய்

'மத்திய வங்கி ஒரு பரீட்சார்த்த மதிப்பீட்டின் பின்னர் இலங்கையில் 500,000 பேர் வேலையற்றிருப்பதாகத் தெரிவித்துள்ளது' என சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா மொறட்டுவை நகர மண்டபத்தில் சமசமாஜக் கட்சிக் கிளையினுல் ஏற்பாடு செய்யப்பட்ட சொற்பொழிவுத் தொடரில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் பெரேரா மேலும் கூறியதாவது: இலங்கையின் சனத் தொகை வருடமொன்றுக்கு 3 லட்சம் அதிகரிக்கிறது. மத்திய வங்கியும் தேசியத் திட்ட சபையும் வேலை செய்வோர் தொகை 1,30,000 கூடியிருப்பதாக மதிப்பிட்டுள்ளது. ஆனல் இந்த வகையில் சுமார் 1,25,000பேரே அதிகரித்துள்ளதாக நான் நம்புகின்றேன்.

1,50,000 பதிவு செய்துள்ள வேலையற்றோர் இருப்பதாக தொழிற் கந்தோர் அறிவித்துள்ளது. இது பூரணமான மதிப்பீடு என கருதமுடியாது. இதை ஏற்கவும் முடியாது. மத்திய வங்கியின் பரீட்சார்த்த மதிப்பீட்டின்படி தெரிவிக்கும் தகவலையே உண்மையென நாம் கருதலாம்.

மத்திய வங்கியின் அறிக்கையின்படி 5,00,000 பேர் வேலையற்றிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

வாழ்க்கைச் செலவு பற்றி அவர் குறிப்பிடுகையில் தெரிவித்ததாவது:-

வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டு வருகையில் இன்று ஊழியர்கள் பெறும் சம்பளம் அவர்களது வாழ்க்கைச் செலவுக்குப் போதுமா என்பது பற்றி நாம் ஆராய வேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து பொருளாதார ரீதியில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லையென்பதை பொருளாதார வல்லுனர்கள் ஏற்றுக்கொள்வர்.

25 சதமாக இருந்த அரிசி விலையை 75 சதமாக உயர்த்தியது யு. என். பி. அப்பொழும் அபிவிருத்திப் பணம் தேவை என்ற பேச்சே நிலவியது. தற்போதைய நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் இதே குரலைத்தான் எழுப்புகின்றார்.

தமது அரசாங்கம் ஒரு சோஷலிச அரசாங்கம் என தற்போதுள்ள அரசாங்கம் பெரிதாகப் பேசிக்கொள்கிறது. ஆனல் நிதிமந்திரியால் கொண்டுவரப்பட்ட இரு பட்ஜட்டுகளும் பொருளாதாரத்துறையில் சிறுமாற்றத்தையாகுதல் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

விரைவான தொழில் அபிவிருத்தியினல்தான் எமது பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். குடிசைக் கைத் தொழிலும் பெரிய கைத்தொழில்களும் இங்கு வளர்க்கப்படவேண்டும்.

# கிராமசேவகர்களுக்கு 2 மாதம் பயிற்சி

## உள்நாட்டு அமைச்சு [illegible]

கொழும்பு, புதன்

கிராம விதானைகளுக்குப்பதிலாக அவர்களது ஸ்தானத்தில் அமர்த்தப்படவிருக்கும் கிராம சேவகர்கள் ஸ்தலஸ்தாபன சபை அதிகாரிகளுடனும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுடனும் விவசாய சங்கங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு உழைத்துவ வருவதற்கான ஒழுங்குகளை உள்நாட்டமைச்சு செய்துவருகிறது. இவ்வாறு பல சங்கங்களுடனும் எவ்வாறு தொடர்புகொண்டு செயற்படவேண்டும் என்பது பற்றி கிராமசேவகர்களுக்கு விசேஷ போதனை அளிக்கப்படும்.

கிராமசேவகர் பரீட்சைக்குத் தோன்றிய பரீட்சார்த்திகளுக்கு நேர்முகப்பரீட்சையொன்று நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. நேர்முகப்பரீட்சை நடாத்தும் பரிசோதக சபைகளை நியமிப்பதற்கு உள்நாட்டு அமைச்சு வழிவகை செய்து வருகிறது.

பரீட்சார்த்திகளிடையே யிருந்து கிராமசேவகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அவர்களுக்கு இருமாத பயிற்சி அளிக்கப்படும். அதன்பின்னரே அவர்களுக்கு வேலைஸ்தலங்கள் குறிக்கப்பட்டு தமது ஸ்தலங்களுக்கு அனுப்பப்படுவர். இந்த இருமாதகாலத்திலும் அரசாங்க அலுவலின் பல அம்சங்கள்பற்றியும் பயிற்சியளிக்கப்படும்.

பிரஸ்தாப கிராமசேவகர்கள் அடுத்தவருட ஆரம்பத்தில் கடமையாற்றத் தொடங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## நம்புக் வெல திசாவா காலமானர்

கண்டி, புதன்

முன்னுள் மினிப்பை எம்.பி. யாகப் பணியாற்றிய எச். பி. நம்புக்வெலா திசாவா நேற்று முன் தினம் கண்டி குவீன்ஸ் ஹோட்டலில் காலமானர். சடுதியாகப் பிரக்ஞையற்று வீழ்ந்த இவர் சிகிச்சையெதுவும் அளிக்கப்படு முன்னரே காலமானர். முதலாவது பார்லிமெண்டிலும் (1947), இரண்டாவது பார்லிமெண்டிலும் (1952) திரு. நம்புக்கவெல்லா மினிப்பை எம். பி. யாகப் பணியாற்றினர்.

மரண விசாரணையின்போது இயற்கையாகவே நிகழ்ந்த மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. எம். சலீம் மரண விசாரணை நடாத்தினர்.

கண்டியிலுள்ள பாட்டாளி மக்களின் நிலைமைகளைச் சீர்ப்படுத்துவதற்கு நம்புக்கவெல்லா திசாவா இடைவிடாது உழைத்தவராவர். மினிப்பையில் குடியேற்றத் திட்டத்தை நிறுவுவதற்கு இவரே முன்னின்று உழைத்தார்.

கண்டி டிறினிற்றிக் கல்லூரியிலும் கல்கிசை சென்ட் தோமஸ் கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றார். உடிஸ்பட்டுக் கோரளையாக இவர் தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். 1942-ல் அரசியலில் இறங்கினர். 1947-ல் மினிப்பை எம் பி.யாகத் தெரிவு செய்யப்பட்ட இவர் 1952-ல் மீண்டும் மினிப்பை எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறக்கும் போது இவருக்கு வயது 75.

---

## நவராத்திரி விழா

மயிலிட்டி, செவ்வாய்

மயிலிட்டி தெற்கு வீரபத்திரர் ஆலயத்தில் நேற்று மாலை 7 மணிக்கு நவராத்திரி விழா ஆரம்பமானது.

இந்து சமய விருத்தி சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும் இவ் விழாவில் சத்திவழிபாட்டுக்குரிய பிரார்த்தனையும், பிரசங்கங்களும் நடைபெறும்

---

## ஆலயங்களில் திருமணம்

### குருக்கள்மார் சபை ஆதரவு

மாவிட்டபுரம், செவ்வாய்

"பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்களால் எழுதப்பெற்ற 'சைவத் திருமணம்' என்னும் நூலில் அவர் சைவாலயங்களில் திருமணம் நடாத்தக்கூடாது எனத் தெரிவித்துள்ளார் இதற்கு ஆகமச்சான்றே, வேறு சான்றே அவர் காட்டவில்லை. ஆலயங்களில்தான் திருமணம் நடைபெறவேண்டுமென்று 'காரணுகமம்' கூறுவதை அவர் அறியாதிருக்கலாம்."

இவ்வாறு கீரிமலை நகுலேஸ்வர ஆலய முன்றலில் நடைபெற்ற சைவக் குருக்கள்மார் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய அகில இலங்கைச் சைவக் குருக்கள்மார் சபைத் தலைவர் திரு. ச. கணபதீஸ்வரக்குருக்கள் தமது உரையிற் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் ஆலயங்களில் திருமணச் சடங்குகள் நடைபெறுவதால் குற்றங்களெல்லாம் தீர்ந்து தம்பதிகளும் ஏனையோரும் தூய்மை பெறுவார்கள் என்றார்.

வித்வசிரோன்மணி ஜே. கே. சீதாராம சாஸ்திரிகள் பேசும்போது, வேதாகமங்களே கோவில்களில் திருமணம் செய்யலாமென சான்று கூறும்போது நாம் அதை மறுப்பது சரியல்ல எனக்குறிப்பிட்டார்.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம், தமது பேச்சில் சைவத்தையும் தமிழையும் நாம் பாதுகாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன், அவற்றைப்பாதுகாக்கவேண்டிய குருமாரே தம்முள் வேறுபடுவது ஆபத்தானதெனவும் தெரிவித்தார்.

வேதாகம வல்லுனர் சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் கோவில்களில் திருமணம் செய்யலாம் என்பதைத் தெளிவுபடுத்தினர். வேறும் பலர் பேசினர்.

# 'ஒன்றுசேர்ந்து கைத்தொழில்களை வளர்க்கவேண்டும்'

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சாவகச்சேரி எம். பி. யோசனை

கொடிகாமம், செவ்வாய்

"நமது நாட்டில் பொருளாதார வளம் மேலோங்கவேண்டுமாகில் நாம் ஒன்று சேர்ந்து நம் நாட்டிற் செய்யக்கூடிய கைத் தொழில்களைச் செய்ய முன் வரவேண்டும். இவ்வகையான பலநோக்குடைய கூட்டுறவு இயக்கத்தை ஆதாரமாகக் கொண்டு பொருளாதாரத்தை வளர்க்கும் வழியில் 'ஏகோபித்து தொண்டாற்றினல் நம் நாடு முன்னேற்றமடையும்."

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பேசும் போது சாவகச்சேரி எம். பி. திரு.வி.என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் திரு எஸ். கே. செல்லையா பேசும் போது, குறுகிய நோக்கமின்றி, பொறுமை, பொறுப் புணர்ச்சியுடன் நீதியாகவும் நேர்மையாகவும் சங்கத்தை நடத்தி வந்தால் பொருளாதாரத்தை வளப்படுத்தலாமென்றுர்.

சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. இ இராஜரத்தினம் பேசும் போது "உங்கள் குடும்பத்தை எவ்வளவு அக்கறையுடன் நடத்துகிறீர்களோ அதே கவனம் சங்கத்திலும் காட்டவேண்டுமென்றுர்.

திரு. ஏ. டி. அலோசியஸ் திரு. பி. நாகராசா ஆகியோர் சங்க வளர்ச்சிக்குரிய ஆலோசனைகளைக் கூறினர்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு. எஸ். கே. செல்லையா, உபதலைவர்: பொ. வேலாயுதபிள்ளை, செயலாளர்: ஆ. கந்தையா, நிர்வாக சபை உறுப்பினர்: திருவாளர்கள் கே. சரவணமுத்து, த. சின்னப்பொடி, சி. வேலு, ச. நல்லையா, ப. முருகேசு, வீ. சிவப்பிரகாசம்.

---


## உங்கள் நோய்

சுணைப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# 'யுனனி வைத்திசாலைகளை ஆரம்பிக்கவேண்டும்'

கொழும்பு, புதன்

'யுனனி வைத்தியத்துக்கு அதற்குரிய இடம் அளிக்கப்படுமென சுகாதார உதவிமந்திரி பார்லிமெண்டில் உறுதி கூறியுள்ளார். ஆனல் இது அமுல்நடத்தும் வரையில் யுனனி வைத்தியர்கள் தமது உரிமைக்காக வாதாடவேண்டும்'என சேர்ராசிக்பரீத்கொழும்பு யுனனி வைத்திய பட்டதாரிகள் சங்க வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'காலம்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சுகாதார மந்திரியாக இருந்தபோது ஒரு முஸ்லிம் இலங்கையில் இருக்கும் வரை யுனனி வைத்தியம் இருந்தே தீரும் எனக் கூறியிருந்தார். காலம்சென்ற பிரதமரின் இந்தக் கொள்கையைப் பின்பற்றுவது இப்பொழுதிருக்கும் அரசாங்கத்தின் கடமை.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அரசாங்கம் யுனனி வைத்தியசாலைகளை ஆரம்பிக்கவேண்டும்.

ஆயுள்வேத வைத்திய சபையில் யுனனி வைத்தியர்களின் ஒரு பிரதிநிதியும் அங்கம் வகிக்கவேண்டும். சுதேச மருத்துவ இலாகாவில் யுனனிவைத்தியத்தில் தகுதிவாய்ந்த ஒருவரை உதவி கமிஷனராக நியமிக்கவேண்டும்.

# 'புதிய கல்வித்திட்டத்துக்கு ஒத்துழைப்புத் தருக!'

## 'விசுவாசமுள்ள பிரஜைகளுக்கு' உதவி கல்வி மந்திரி வேண்டுகோள்

கடானை, புதன்

"நாட்டின் கல்விமுறை சரியாக இல்லாததால் தினசரி ஆயிரக்கணக்கான பிள்ளைகள் வேலையற்றவர்களாக்கப் படுகிருர்கள். தற்பொழுது எஸ்.எஸ்.ஸி. சித்தியெய்திய ஒருலட்சம் வாலிபர்கள் வேலையற்றிருக்கிருர்கள். ஆசிரியர் வேலைக்கு இவர்கள் முயற்சிசெய்கின்றனர். இன்னும் பத்தாயிரம் பாடசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்படாலும் கூட இவர்களனைவருக்கும் உத்தியோகம் கொடுப்பது சாத்தியமில்லை என்று உதவி கல்வி மந்திரி திரு. வி. ஜி. கருணைரத்ன சென்ற சனிக்கிழமை கனேபொலமகா மகாவித்தியாலயத்தில் கலைகைத் தொழில் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்த நிலைமையை ஒழித்துக்கட்டுவதற்காகத் தான் புதிய கல்விமுறைக்கு அரசாங்கம் அத்திவாரமிட்டுள்ளது. எங்களின் இந்த முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்ற இந் நாட்டின் விசுவாசமுள்ள பிரஜைகளும் ஒத்துழைப்பளிக்க வேண்டும்" என்று திரு. கருணைரத்தின கேட்டுக்கொண்டார்.

கடானை எம். பி. திரு. விஜபாலாமென்டிஸ் பேசுகையில் கிராமங்களில் போட்டிக்கோஷ்டிகளிருப்பது முன்னேற்றத்துக்குத் தடையாகும் என்று கூறினர்.

---

# "புத்தகப்படிப்பு மட்டும் போதாது"

அக்கரைப்பற்று, புதன்

"மாணவர்கள் புத்தகப்படிப்போடு மாத்திரம் நின்றுவிடாது இதுபோன்ற ஆக்க முயற்சிகளில் தாராளமாக ஈடுபடவேண்டும். இதற்கு அமைவாக கல்வித்திட்டம் உருவாகிவருகிறது" என்று அட்டாளைச்சேனை வடக்கு அரசினர் முஸ்லிம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கதம்ப விழாவுக்குத் தலைமைவகுத்துப் பேசுகையில் அக்கரைப்பற்று வட்டார வித்தியாதரிசி ஜனப் எஸ். எம். எம். அப்துல்கபூர் குறிப்பிட்டார். அக்கரைப்பற்று வட்டாரத்தின் வடகிழை ஆசிரிய சிங்கத்தின் தலைவர் ஜனப் ஜே. ஏம். பதுறுத்தீன் மௌலான எல்லோரையும் வரவேற்றுப் பேசினர்.

"மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக இருக்காது கலை, கலாச்சாரத்திலும் ஆர்வமுள்ளவர்களாக இருக்கவேண்டும் இதற்கு பெற்ரேர்களும் ஆசிரியர்களுடன் சேர்ந்து பூரணமான ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் மாணவர்களின் ஆக்கமுயற்சி புரட்சிகரமான முன்னேற்றத்தைப் பெறடியும்" என்று ஜனப் கபூர் மேலும் கூறினர்.

---

# 'எனது தொகுதிக்கு அதிக பஸ்கள் தேவை'

—குருநாகல் எம். பி.

கொழும்பு, புதன்

"குருநாகல் இ. போ. ச. பகுதியினர் குறிப்பிடப்பட்ட தொகையிலும் மிகக் குறைந்த அளவு பஸ்களையே சேவைக்காக வைத்துள்ளார்கள்" என குருநாகல் எம். பி. திரு ஜெயபத்திரான தொழில் தேசியமய சேவை மந்திரிக்கு அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் தெரிவித்துள்ளார்

அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

குருநாகல் தொகுதிக்கென 145 பஸ்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனல் 115 பஸ்களே சேவைக்கு உகந்த நிலையில் உள்ளன. 145 பஸ்களும் இங்கு அதிகரித்துவரும் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாதிருக்கின்றன.

குருநாகல் இ. போ. ச. பகுதி மனேஜரையும் மற்ற உத்தியோகஸ்தர்களையும் கொண்ட ஒரு மகாநாட்டை இ. போ. ச. தலைவர் கூட்டி இங்கு தேவைப்படும் பஸ்கள்பற்றி ஆராயவேண்டும்.

இ. போ. ச. பகுதி ஆலோசனைக் கமிட்டி எதுவித நன்மையையும் செய்வதாகத் தெரியவில்லை.

குருநாகல் இலங்கையில் ஒரு முக்கிய கேந்திரமாய் இருந்தும் இங்கு ஒரு நல்ல [illegible] பிரயாணிகள் தங்கிச்செல்வதற்கு உகந்த ஒரு தங்குமிடமோ இல்லை.

# வானெலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 12-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 கோட்டு வாத்தியம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 1-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 தமிழ்மூலம் சிறுவர்களம்-3 7-15 நேயர் விருப்பம், 7-45 'பிடியுங்கள் கலப்பை'- நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-15 வாத்திய கோஷ்டி, 9-30 தேர்ந்த இசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 திருக்கோயிலூர் எஸ். புஷ்பா- பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கே. வாசுதேவன் - பாட்டு, 1-30 நாகஸ்வரம், 1-50 குரல் இசை, 2-10 திருக்கோயிலூர் எஸ்: புஷ்பா பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி டி. ராதாகிருஷ்ணன் - புல்லாங்குழல், 8-40 திரைப்பட இசை, 9-15 ரேடியோ நாடக இசை, 9-30 கே. வாசுதேவன்— பாட்டு.

---

# வீடமைப்புக் கடனுக்கு சலுகை

கொழும்பு, புதன்

வீடமைப்புக்கு 2000 ரூபாய் வரை கடன் கோருபவர்கள் கடன் பெறுவதற்காக பிணை கட்டுவதற்கு இனி கஷ்டப்பட வேண்டியதில்லை.

பிணை கட்டுவதற்கு முடியாதவர்கள் தாங்கள் வீடுகட்டப் போகும் நிலத்தை வீடமைப்பு இலாகாவிடம் அடகுவைத்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று வீடமைப்பு இலாகா தீர்மானித்துள்ளது.


# குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்: குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ, குருதெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

# மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM

மொணரு அன் ரோஸ் பப்படங்கள் மூவர்ணகலர் லேபிளுடன் மயில் — ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM TRADE MARK No 18255

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

# சமயப் பணியாற்றி வரும் இலங்கையரல்லாதார்

## விசா வரி வசூலிப்பதற்கு டாக்டர் கலீல் கண்டனம்

கொழும்பு, செவ்.

"இலங்கையிலிருந்து சமயப் பணியாற்றிவரும் இலங்கையரல்லாத பிறதேசத்தவர்களிடமிருந்து அவர்கள் இலங்கையில் இருப்பதற்காக விசாவரி வசூலிக்கப்படுவது ஒரு கொடூரமான செயலாகும். இந்த உறைவிட வரியைப் போல சின்னத்தனமும் கொடூரமும் நிறைந்த வரிமுறை வேறெதையும் நான் காணவில்லை."

அகில இலங்கை முஸ்லிம் மன்றத்தின் 28-வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் எம். சி. எம். கலீல் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"சிலர் இந்த விசா வரியை ஏற்கெனவே செலுத்திவிட்டதற்காகத் தொடர்ந்தும் இவ்வரியை வசூலிக்க வேண்டுமென்றில்லை. மத 'மிஷனரிகள்' இங்கு வந்து தமது சமயப் பிரசாரம் செய்வதைத் தடுப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகவிருந்தால் 'வரி செலுத்தத் தயாராக இருக்கும்வரை மிஷனரிகள் சமயப் பிரசாரம் செய்யலாம்' என்று அரசாங்கம் சொல்லியிருக்க வேண்டியதில்லை.

"இலங்கையிலுள்ள வெவ்வேறு மத மிஷனரிகள் இந்நாட்டில் ஆத்மீக அறிவும் ஒழுக்க நெறியும் வளர்வதற்குப் பாடுபடுபவர்கள்."

"எம்மீது எவ்வளவு வரியையும் சுமத்தலாம். பரவாயில்லை. நாம் செலுத்தும் வரி அவ்வளவும் நாட்டின் அபிவிருத்திக்கும் மக்கள் நலனுக்கும் பிரயோசனப்படுத்தப்படும் வரை நாம் அதை ஆட்சேபிக்கப்போவதில்லை.

"மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எதுவித பரிகாரமும் தேடிக்கொள்ளாததுபற்றி எமதுகவலையைக் குறிப்பிட விரும்புகின்றோம். ஒற்றுமையில்லாவிட்டால் எந்த நாடும் முன்னேற முடியாது. எனது கருத்தின்படி மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் அரசாங்க மொழிகளாக வேண்டும். நாடு முழுவதும் ஒற்றுமை நிலவுவதற்கு இதுவே ஒரு வழியாகும்.

"நியாயமான கோரிக்கை எதுவும் மக்களுக்கு வழங்கப்படாத சமயத்தில்தான் நியாயமற்ற கோரிக்கைகளையும் வேண்டிக் கொள்ளுவார்கள் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்திருக்க வேண்டும்."

## 'நுளம்புகளைத் தவிர வேறு துணை இல்லை'

### சங்கத் தலைவர் கவலை

ரத்மலானை, செவ்வாய்

"நுளம்புகளைத் தவிர வேறு எவரும் எமது நிலைமை பற்றி எவ்வித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை. நுளம்புகளே எங்கள் நெருங்கிய கூட்டாளிகளாக இருக்கின்றன."

இவ்வாறு டி' சொய்சா தோட்ட நலன் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் திரு. வி. டி. டி' சொய்சா, சங்கத்தின் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். பிரஸ்தாபக் கூட்டம் நேற்று முன்தினம் ரத்மலானையில் நடைபெற்றது. திரு. வி. டி. டி' சொய்சா மேலும் கூறியதாவது:

"தெஹிவளை, கல்கிசை நகரசபை நிருவாக எல்லைகளுள்ளும், கோட்டை கிராமசபை நிருவாக எல்லையுள்ளுமே டி' சொய்சா தோட்ட நலன் பாதுகாப்புச் சங்கத்தின் அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இந்த நகரசபையோ கிராமசபையோ அங்குள்ள மக்களின் நிலைமை பற்றி எதுவித அக்கறையும் எடுப்பதில்லை. எமது பகுதிகளில் வடிகால்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. மழை காலத்தில் முழு நிலப்பகுதியிலும் வெள்ளமும் சேறும் ஏற்படுவதால் நுளம்புகள் பல்கிப்பெருகுகின்றன. மக்கள் மிகுந்த பீதியுடன் வாழுகிறார்கள். முக்கியமாகப் பிள்ளைகளின் தேகசுகத்தைப் பற்றி பெரிதும் கவலைப்படுகிறார்கள். தெருக்களில் வெளிச்சம் எதுவுமில்லை. வீதிகளோ சுத்தம் செய்யப்படுவதில்லை. பொது மக்களுக்குத் தேவையான வசதிகள் எதுவும் இங்கு இல்லை. கொழும்புக்கு அண்மையிலுள்ள ரத்மலானை போன்ற இடத்தில் எதிர்பார்க்கக்கூடிய வசதிகள் எதுவும் இங்கு இல்லை."

சங்கத்தின் உதவித் தலைவர் திரு. அத்துறுக்குலசிங்கா பேசுகையில் கூறியதாவது:—

"இங்குள்ள தலஸ்தாபன சபைகள் இரண்டும் பெருந்லிப்பதிலேயே வரிகளை வசூலிப்பதிலேயே கவனத்தைச் செலுத்துகின்றன. ஆனால் மக்கள் தாம் செலுத்தும் வரிக்குப் பதில் எதுவித நன்மையும் பெறுவதில்லை."

அடுத்த ஆண்டுக்கான செயற்குழு இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

## நிதி மந்திரி நாடு திரும்பினர்

கொழும்பு, செவ்வாய்

நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தனது வெளிநாட்டு சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு இன்று பிற்பகல் கொழும்பு திரும்பினர். மந்திரிகள், எம். பி. க்கள், ராஜதந்திர தூதர்கள், நண்பர்கள் ஆகியோர் இரத்மலானை விமான நிலையத்தில் அவரைச் சந்தித்தனர்.

## 5000 ஆசிரியர்கள் ஒன்றுபடுவர்

கொழும்பு, செவ்வாய்

தங்கள் கோரிக்கைக்குப் போராடுவதற்காக நாட்டின் சகல பகுதிகளிலும் சேவை செய்யும் 5000 ஆங்கில உதவி ஆசிரியர்கள் சீக்கிரம் ஒரே சங்கத்தின் கீழ் ஒன்றுபடுவர். ஆங்கில ஆசிரியர்களைக் கொண்ட பல யூனியன்களையும் ஒரு ஐக்கிய சங்கத்தின் கீழ் ஒன்றுபடுமாறு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## 32 கோடி செலவில் உரத் தொழிற்சாலை

புதுடில்லி, அக். 10

32 கோடி ரூபாய் செலவில் ரசாயன உரஉற்பத்தி தொழிற்சாலை ஒன்று மைசூரில் ஆரம்பிக்கப்படும்.

# மார்ட்டின் ரேட் இரட்டைக்கொலைவழக்கு

## விசாரணைக்குப்பின் 28-ந் திகதி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்ட்ரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் மார்ட்டின் ரோட்டு இரட்டைக் கொலை வழக்கு சம்பந்தமான விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

இவ்வழக்கில் சின்னத்துரை குணரத்தினம் என்ற ஒரு தபால் ஊழியர், மனுவேல் பிள்ளை அருளானந்தம் துரைராஜா, மனுவேல்பிள்ளை செல்வம் மரியதாஸ் ஆகிய இருவரையும் கத்தியால் குத்திக் கொலை செய்ததாய்க் குற்றம் சாட்டப்பட்டது.

காலஞ் சென்ற துரைராஜாவின் 11 வயதுப் புதல்வன் ராசநாயகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவ தினத்தன்று இரவு சுமார் 7–30க்கு நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வாக்குவாதம்பண்ணும் சத்தம் கேட்டது. நான் ஓடிச் சென்று பார்த்தேன். அப்போது 10, 15 பேர் எங்கள் வாசலருகில் இருந்ததைக் கண்டேன். என் தந்தை அங்கு சென்று சண்டை பிடித்துக் கொண்டிருந்த இருவரையும் கலைந்து போகுமாறு கூறினர். குணரத்தினம் தனது காம்பவுண்டுக்குள் போய் வந்து ஒரு கிரிஸ் கத்தியால் எனது சிறிய தந்தையைக் குத்தினர். 12அடி தூரத்திலிருந்து என் தந்தை அங்கு விரைந்தபோது அவரையும் குத்தினர்.

பிரேதப் பரிசோதனை நடத்திய டாக்டர் வேலும்மயிலும் வாக்குமூலமளித்தபின் வழக்கு இம்மாதம் 28-ந் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

## அமெரிக்காவும் அங்கீகரித்தது

வாஷிங்டன், அக். 10

சுதந்திர சிரியா அரசாங்கத்தை அமெரிக்கா அங்கீகரித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது. சீக்கிரம் பிரிட்டனும் சிரியாவை அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சாவூதி அராபியா, டுனிஸியா, ஈரான் ஆகிய அராபிய நாடுகளும் சிரியாவை அங்கீகரித்தன.

## ஜெர்மனிக்கு கலாச்சார தூதுகோஷ்டி

கொழும்பு, செவ்வாய்

வருகிற வியாழக்கிழமை இருவரைக் கொண்ட இலங்கை கலாச்சார தூதுகோஷ்டி ஒன்று ஜெர்மனிக்குப் புறப்படவிருக்கிறது. 3 வாரங்கள் அது ஜெர்மனியில் சுற்றுப்பிரயாணம் செய்யும்.

# 'எதிர்காலத்தில் சொத்துக்களை உரிமை கொண்டாடுவதும் சந்தேகமே'

## மாத்தறை கூட்டத்தில் திரு. அமரசூரியா பேச்சு

கொழும்பு, செவ்.

"தேயிலைத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள் அல்லது இதர சொத்துக்களை வைத்திருப்பவர்கள் எதிர்காலத்தில் அவைகள் தங்கள் சொத்து எனக் கூறிக் கொள்ள முடியுமா என்பதே சந்தேகமாகயிருக்கிறது. அரசாங்கம் தனது பெரும்பான்மை பலத்தால் அவைகளைத் தானே மேற்கொள்ளவும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது." என மாத்தறை ராகுல கல்லூரியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. எச். டப்ளியு. அமரசூரியா கூறினர்.

"அறிவு அல்லது நற்பழக்கங்களையும் கூட அது பறிமுதல் செய்யக்கூடும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மதச் சூழ்நிலையில் சிறந்த கல்வி அளிப்பதுபற்றி ஆராய வேண்டும்" என்றும் அவர் கூறினர்.

## நாதஸ்வர வித்வானுக்கு நேரு பதக்கம்

புதுடில்லி, அக். 10

இன்று பிரதம மந்திரி நேருவின் இல்லத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில், பிரபல தென்னிந்திய நாதஸ்வர வித்வான் குளிக்கரை பிச்சையப்பாவுக்கு, ஸ்ரீ நேரு தங்கப் பதக்கம் ஒன்றை வழங்கினர்.

## ஐயாறன்

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

க்கும்போது ஏன் இந்தச் சனியன் பிடித்த தேர்தல் வருகிறது என்று தோன்றும்.

ஆனல் ஜனநாயகம் எனப்படும் இந்தப் பணநாயகத்துக்கு தேர்தல் என்பது இன்றியமையாதது' என்ன செய்யலாம்! நமக்காகத் தொண்டுசெய்யத் தங்கள் உடல் பொருள் ஆவியையும் விட்டு விடப் பலரும் முன்வருவது பெரிய காரியமே.

அவர்கள் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு முடிவில் நம்மீது பாய்வதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. திருவுளச்சீட்டுப்போட்டு, நமது பிரதிநிதிகளை தெரிவுசெய்வதாயின், இந்தத் தொல்லையே இல்லாது போகும். ஆனல் இந்தக்காலத்தில் யார் இந்த யோசனையைக் கேட்கப்போகிறார்கள்!

மைசூர், அக். 10

மைசூரில் இன்று தலாரா கொண்டாட்டம் கோலாகலமாக ஆரம்பமாகியது.

சம்பளத்தை

# சம்பள நிர்ணய சபை நியமிக்கவும்;: பாடசாலை ஊழியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

பாடசாலை ஊழியர் சம்பளத்தை நிர்ணயிக்க ஓர் சபையை நியமிக்குமாறு தொழில் கமிஷனரைக் கேட்டுக் கொள்வதற்கு ஓர் குழுவை கமிஷனரைப் பேட்டி காண அனுப்புவதென வட இலங்கை பாடசாலை ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

இக்கூட்டம் அண்மையில் உபதலைவர் திரு. கே. நடராசா தலைமையில் நடைபெற்றது.

வடபிரதேச வித்தியாதிபதியாக நியமனம் பெற்றுள்ளமையைப் பாராட்டி திரு. எஸ். யூ. சோமசேகரத்துக்கு ஓர் பாராட்டுச் செய்தியை அனுப்புவதெனவும் வித்தியாபகுதியின் நிருவாகத்தில் இயங்கும் சில பாடசாலைகள் ஊழியர்களின் சம்பளத்தில் நாலு வீதத்தை அரசாங்க சேமலாப நிதியாக எடுப்பதற்குப் பதில் பத்து வீதத்தை அறவிடுவதுபற்றி உதவி வித்தியாதிபதியைப் பேட்டி காண்பதற்கு ஒரு குழுவை அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## பலாலி கொலைவழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

பலாலியில் கந்தையா அண்ணாமலை என்பவரைச் சுட்டுக் கொல்ல முயன்றதாக பெரியதம்பி நல்லையா என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றவாளியில்லை என ஜூரர்மார்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாய் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா அவரை விடுதலை செய்தார்.


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

எம். ஆர்: ராதா, சௌகார் ஜானகி நடித்த

**உலகம் சிரிக்கிறது**

கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

**பாவ மன்னிப்பு**

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6–30 க்கும் இரவு 9-30 க்கும்

எஸ். எஸ். ராஜேந்திரன், சரோஜாதேவி நடித்த

**மணப்பந்தல்**

தினசரி மாலை 4-15 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

**ALIAS JESSE JAMES**
(ENGLISH)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவரசனது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.